விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 219 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 10 செவ்வாய்க்கிழமை (26.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# எதிர்வரும் 12 மாதங்களுக்கு எரிபொருள் நெருக்கடி தொடரும்

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜசேகர

- இன்று முதல் QR குறியீட்டு முறை அமுலாகும்
- இறுதி இலக்கத்துக்கான எரிபொருள் விநியோகம் ஆகஸ்ட் 1 வரை மட்டுமே அமுல்



(11 ஆம் பக்கம் பார்க்க)

பொது இடங்களில்

## முகக்கவசம் அணியுங்கள்

சுகாதார அமைச்சு

(கொழும்பு)

பொது இடங்களுக்குச் செல்லும்போதும் பயணத்தின் போதும் முன்புபோல் முகக்கவசம் அணியுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் மீண்டும் கோவிட்-19 பரவும் 11

## “கோட்டா கோ கம” செயற்பாட்டாளர்கள்

வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)

“கோட்டா கோ கம” செயற்பாட்டாளர்கள் குழுவிற்கு வெளிநாடுகளுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவை சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஜீவந்த பீரிஸ், வசந்த முதலிகே, லஹிரு வீரசேகர மற்றும் எரங்க குணசேகர ஆகியோருக்கே நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த தடையை விதித்துள்ளது. 11

போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்

# பொருளாதார தடையை நாடு எதிர்கொண்டுள்வது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

காலி முகத்திடலில் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை இராஜதந்திரத் தடைகள் மற்றும் பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்

மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் வழங்கிய ஆணை தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தி, புதிய மக்கள் ஆணைக்கு செல்ல வழியமைக்க வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். 11

கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு

## யாழில் இ.போ.ச சேவை வழமைக்குத் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழில் இ.போ.ச சேவை இன்று முதல் வழமையாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்து சபை ஊழியர்களின் பணிப்பகிஸ்கரிப்பு கைவிடப்பட்டது. வடக்கு பிராந்தியம் தழுவியதாக கடந்த இரண்டு நாட்களாக போக்குவரத்து சேவைகள் முடக்கப்பட்டு பணிப் 11

பொருளாதாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில்

## கடுமையான முடிவெடுக்காவிட்டால் நாடு படுகுழிக்குள் வீழ்ந்துவிடும்

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித்



(கொழும்பு)

ஜனாதிபதி கடுமையான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் நாடு பொருளாதார படுகுழிக்குள் விழும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் 11

போராட்டம் வன்முறையானதால்

## சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தாமதமாகியுள்ளது

அமைச்சர் மனுஷ நாணயக்கார



(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்டில் இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்படவிருந்த ஊழியர் மட்ட உடன்படிக்கை பிந்தள்ளப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள் 11

## யாழில் 50 வீதமான தனியார் பேருந்துகள்

இன்று சேவையில் ஈடுபடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஐம்பது வீதமான தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடும் என யாழ். மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்க அரசிடம் என்ன வேலைத்திட்டம் உள்ளது

## ஜனாதிபதி மக்களிடம் அறிவிக்க வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை



(கொழும்பு)

**வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை மீட்டெடுக்க எவ்வாறான வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் உள்ளது என்பதை ஜனாதிபதி உடனடியாக நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எமது தரப்பினருக்கு, தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதே பிரதான இலக்காக இருந்தது.

ஆனால், இந்த ஜனாதிபதியை தெரிவு செய்தவர்களோ, தங்களின் அரசியல் லாபத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்பட்டிருந்தார்கள். பாராளுமன்றத்தின் அபிப்பிராயத்துக்கும் மக்களின் அபிப்பிராயத்துக்கும் இடையில் பாரிய வித்தியாசம் உள்ளதை இதன் ஊடாக அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி மாறிவிட்டார் என்பதற்காக, புதிய அரசாங்கத்துக்கு சர்வதேச ரீதியாக இன்னமும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் விஸ்வாசமும் இந்த அரசாங்கத்துக்கு கிடைக்கவில்லை.

மக்களால் வாழ முடியாத நிலைமையே நாட்டில் காணப்படுகிறது. வருமானம் வரும் வழிகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளன.

இன்னும் ஓரிரு நாட்களில் மின்சாரக்கட்டணமும் உயர்வடையப் போவதாகக் கூறப்படுகிறது. அப்படி நடந்தால் மக்களால் நிச்சயமாக அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது போகும்.

மின்சாரம் இருந்தாலும் மக்கள் மின்சாரத்தை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் 3, 4 மடங்காக அதிகரித்துள்ளன.

இதனைக் கட்டுப்படுத்தி, மக்களைப்பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இது தொடர்பாக ஜனாதிபதி உடனடியாக நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டம் எவ்வாறு உள்ளது என்பதை மக்களுக்கு அவர் அறிவிக்க வேண்டும் என்றார். (ம-7)

### உள்நாட்டு நிர்ப்பந்தங்களை கொண்டு

# வெளிநாட்டு உறவுகளை முன்னெடுக்க எதிர்பார்க்கிறேன்

## அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும் கருத்தில் கொண்டு, இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அமைச்சின் ஆணையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர், அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்நாட்டு நிர்ப்பந்தங்களையும் கருத்தில் கொண்டு, இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அமைச்சின் ஆணையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு இதுவரை வழங்கப்பட்ட தலைமைத்துவத்திற்காக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இற்கு பாராட்டுக்கள்.

அமைச்சர் அலி சப்ரி நீதி அமைச்சராக பணியாற்றிய கால கட்டத்தில் பல முக்கிய சட்ட திருத்தங்களை மேற்கொண்டுள்ளதோடு, நிதியமைச்சராக சேவையாற்றிய போது, வோஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான சமீபத்திய பேச்சுவார்த்தைகளுக்கான இலங்கையின் தூதுக் குழுவை அவர் வழிநடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மின்சாரம் தாக்கியதில் 11 வயது சிறுவன் பலி

(கொழும்பு)

வெல்லவாய, கொட்டவெஹெரகல பிரதேசத்தில் விளையாடிக்கொண்டு இருந்த 11 வயதுச் சிறுவன் மின்சாரம் தாக்கியதில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மல்வத்தவல வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்று வந்த ஆர்.எம்.நுவன் நெத்சர என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் உறவினர் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்தவேளை அருகில் உள்ள துடைப்பம் அருகே போடப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிகமான விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர் தேவை.

❖ **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள்)**
சிங்களத்தில் சரளமாக பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர் தேவை.

❖ **பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)**

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**076 097 3121**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வேகமெடுக்கும் கொவிட்
# சுகாதார வழிமுறைகளை இறுக்கமாக்குங்கள்
# சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

சுகாதார அமைச்சின் கொவிட்-19 தொற்று கட்டுப்பாட்டு பிரிவின் பிரதான ஒருங்கிணைப்பு நிபுணர், மருத்துவர் அன்வர் ஹம்தானி நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் முன்னதாக கடைப்பிடிக்கப்பட்ட சுகாதார வழிமுறைகளை மீண்டும் பின்பற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியினை கடைப்பிடித்தல், அவசியமற்ற நடமாட்டத்தை கட்டுப்படுத்தல் மற்றும் ஒன்று கூடல்களை கட்டுப்படுத்தல் போன்ற வழிமுறைகளை பின்பற்றுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், நாட்டில் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸானது ஒமிக்ரோன் வைரஸின் திரிபாக கண்டறியப்பட்டுள்ளதுடன், குறித்த வைரஸ் வேகமாக பரவி வருகிறது.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் நிலைமை தொடர்ந்தும் கட்டுப்படுத்தக்கூடிய அளவிலே காணப்படுவதாகவும் சுகாதார வழிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# யாழில் பொதுப்போக்குவரத்து முடக்கம் மாணவர்கள் உட்பட பயணிகள் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை பணியாளர்கள் மற்றும் தனியார் பேருந்து சாரதிகள் நேற்று திங்கட்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச. பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச. சாலை ஊழியர்களினால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்ட நிலையில் தாக்குதலை நடத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்என இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை ஊழியர்கள் கடந்த இரண்டு தினங்களாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எரிபொருள் பெறுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக யாழ்.மாவட்டத் தனியார் பேருந்துகள் நேற்றுத் திங்கட்கிழமை சேவையில் ஈடுபடவில்லை.

சேவையில் ஈடுபட எரிபொருள் இல்லாததால் முழு தனியார் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்து தூர பேருந்து சேவையும் இடம்பெறவில்லை.

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் சேவை புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

குறிப்பாக நீண்டகாலத்திற்குப் பின்னர் நேற்று பாடசாலைகள் ஆரம்பமாகிய நிலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-6-18-33-104)

## QR குறியீட்டு முறைமை ஓகஸ்டில் முழுமையாக அமுலாகும்-காஞ்சன

(கொழும்பு)

வாகன இலக்கத்தகட்டின் இறுதிஇலக்கத்துக்கமைய எரிபொருள் வழங்கும் முறைமை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிவரை தொடரும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். அதன் பின்னர் முழுமையாக QR குறியீட்டு முறைமை மாத்திரம் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக QR முறைமையில் எரிபொருள் வழங்கும் நடவடிக்கைகள் மேலும் சில நாட்களுக்கு தாமதமாகும் என தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இலங்கையிலும் குரங்கம்மை பரவுவதற்கான சாத்தியம்
### மருத்துவர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையிலும் குரங்கு அம்மை வருவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன் அறிகுறிகள் நன்கு வெளிப்படுவதால் நோயாளர்களை இலகுவாக அடையாளம் காண முடியும். கொரோனாவுடன் ஒப்பிடும் போது தொற்று விகிதம் குறைவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் சர்வதேசத்திற்கான எச்சரிக்கை அறிக்கை ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## முட்டை விலை மேலும் அதிகரிப்பு


(கொழும்பு)


முட்டை விலை மேலும் அதிகரித்துள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தீவனங்களுக்கான விலை அதிகரிப்பு காரணமாக, முட்டைகளுக்கான விலை அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன்முட்டை பாவனையும் அதிகரித்துள்ளதுடன், எதிர்காலத்தில் முட்டையொன்றின் விலை 55 ரூபா வரை அதிகரிக்க கூடும் என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார். (நி)

# கறுப்பு ஜூலை நினைவு நாள் காலிமுகத்திடலில் அனுஷ்டிப்பு





(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கறுப்பு ஜூலை இனக்கலவரங்களின் 39 ஆவது ஆண்டு நினைவு நாள் காலிமுகத்திடலில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், 1983 ஜூலையில் கொடூரமாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமையை அடையாளப்படுத்தும் வகையில் கலைஞர் பிரபுத்த தனுஷ்க காலிமுகத்திடலில் ஆற்றுகையொன்றை அரங்கேற்றியிருந்தார். (நி)

## க.பொ.த சாதாரண தரப்பரீட்சை
## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள்
# மீண்டும் ஆரம்பம்
### பரீட்சைத்திணைக்களம்

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் பொதுத் தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டு பணியை மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், மதிப்பீட்டு நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், பரீட்சை கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்கும் முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)

## கப்ராலுக்கான பயணத்தடை
# மேலும் நீடிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த பயணத்தடையினை எதிர்வரும் ஒக்டோபர் 26 ஆம் திகதி வரை நீடித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோனினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேலதிக நீதிவான் காஞ்சனா நெரஞ்சனி டி சில்வாவினால் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே இந்த தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பொறுப்பு கூற வேண்டும் எனவும் அதன் காரணமாக அவருக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்குமாறு கோரி மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா கிரிக்கெட் பிரிவு III-2022

## டிறிபேக்ஸ்ரார் முதலாமிடம்

டிறிபேக்ஸ்ரார் அணி 13 ஆவது தகுதி காண் போட்டியில் யாழ்.சென்றல் அணியை 118 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஏற்கனவே 3 ஆவது தகுதி காண் போட் டியில் நியூஸ்ரார் அணியை 89 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. பிரிவு 'B' யில் டிறிபேக்ஸ்ரார் அணி முதலாம் இடத்தை (WINNER) கைப்பற்றியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற யாழ். சென்றல் அணியுடனான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக்ஸ்ரார் அணி 43.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சுகிர்தன்-48, தர்ஸன்-41, நிதானந்-25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். சென்றல் அணி சார்பாக சலிஸ்ரன் 10 ஓவர்களில் 53 ஓட்டங்களைக் கொடுத்து 05 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 28.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மில்வர்-24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டிறிபேக்ஸ்ரார் அணி சார்பாக சாயித்தியன் 1.2 ஓவர்களில் 3 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், லக்ஸன் 1 ஓவரில் 5 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், சுகன்தன் 7 ஓவர்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், றஜீஸ் 7 ஓவர்களில் 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், சங்கீதன் 6 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு டிறிபேக்ஸ்ரார் அணி 9.14 புள்ளிகளையும், யாழ்.சென்றல் அணி 1.76 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டுள்ளன. (க)



# கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

## இறுதிப்போட்டிக்குள் வல்வை ப்ரண்ட்ஸ்



விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் வளர்மதி எக்ஸ்ரிம் அணியை சமநிலை தவிர்ப்பு உதையில் வெற்றி கொண்டு இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது வல்வை ப்ரண்ட்ஸ்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் வல்வை ப்ரண்ட்ஸ் அணியினரை எதிர்த்து வளர்மதி எக்ஸ்ரிம் அணியினர் மோதிய போட்டியில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களை போட ஆட்டமானது சமநிலையில் முடிந்தது.

தொடர்ந்து நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் வல்வை ப்ரண்ட்ஸ் அணியானது 6:5 என்ற கோல் கணக்கில் வளர்மதி எக்ஸ்ரிம் அணியை வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. போட்டியின் நாயகனாக வல்வை ப்ரண்ட்ஸ் அணியின் கோல் காப்பாளர் சந்ரு தெரிவு செய்யப்பட்டார்.(6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2672

### வேதிஜா

பக்கத்து வீட்டுக்காரன் செத்தா அவன் பேய்...



நம்ம வீட்டில் யாராவது செத்தா அவங்க சாமி... என்னடா நியாயம் இது...

### கஜன்

கோடி கோடியாய் பணம் வேண்டாம்..நீச்சல் குளத்துடன் பங்களா வேண்டாம்



இப்படிப்பட்ட இடத்தில் ஒரு குடிசை வீடு இருந்தால் போதும் வாழ்கை சொர்கம் தான்

### அஸ்வந்

அதிகமா செல்லம் கொடுத்து வளர்கின்ற பிள்ளையும் சின்ன வயதிலையே "செல" லை கொடுத்து வளர்க்கிற பிள்ளையும் உருப்படாது...



### ஆஷா

ஆடி காரில் போவது வசதியான வாழ்க்கை அல்ல...!
ஆஸ்பத்திரிக்கு போகாமல் வாழ்வதே வசதியான வாழ்க்கை...!



### கிசோன்

ஆடம்பரம் இல்லாவிட்டாலும் ஐந்து அறிவு ஜீவன்களை



தன் பிள்ளைகள் போல வளர்க்க ஏழைகளால் மட்டும் தான் முடியும்

### சுமதி

சிலிண்டர் விலை ஏறிச்சு என்று இப்பதாண்டா கரண்ட் அடுப்பு வாங்கிட்டு வந்தேன்.



வீட்டுக்கு வந்து பார்த்தா கரண்ட் பில் விலையும் ஏத்திட்டிங்களேடா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்திற்கு தேவையான எரிபொருள், உரத்தினை வழங்கக்கோரி சங்கானையில் விவசாயிகள் போராட்டம்

(அராலி)

**டீசல், மண்ணெண்ணெய் மற்றும் செயற்கை உரம் என்பனவற்றை வழங்கக்கோரி சங்கானை பிரதேச செயலகம் முன்பாக விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.**



தமது விவசாயத்திற்கு தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பவற்றை சீரான முறையில் விநியோகிக்குமாறும் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான பசளையினை சீராக விநியோகிக்குமாறு கோரி சங்கானை பிரதேச செயலகம் முன்பாக விவசாயிகள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 12 விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த விவசாயிகளே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் பிரதேச செயலரை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினையும் கையளித்தனர்.



மகஜரை பெற்றுக்கொண்ட சங்கானை பிரதேச செயலர் திருமதி. பொ.பிரேமினி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், விவசாயிகளது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அரசாங்க அதிபருக்கு அனுப்பவுள்ளேன்.

விவசாயிகளை பொறுத்தவரையில் எரிபொருள் என்பது விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ள இந்தக் கால கட்டத்தில் மிகவும் முக்கியமானது. எனவே அரசாங்க அதிபரிடம் இது தொடர்பாக கலந்துரையாடுவதாக தெரிவித்தார். (நி-6-33-104)

# வவுனியா சாலை ஊழியர்களும் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு



(நெளுக்குளம்)

இலங்கை போக்குவரத்து சபை வவுனியா சாலை ஊழியர்களும் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.


உதவி சாலை முகாமையாளரை (பொறியியல்) மாற்ற கோரியும் ஊழியர்களிற்கான பெற்றோலினை சீரான முறையில் வழங்க கோரியும் குறித்த பணிப் பகிஷ்கரிப்பினை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக இ.போ.ச வவுனியா சாலைக்குரிய பேருந்துகள் அனைத்தும் நேற்று சேவையில் ஈடுபடவில்லை.

கல்வி அமைச்சினால் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இ.போ.ச. வவுனியா சாலையினர் பணிப்பகிஸ்கரிப்பு மேற்கொண்டமையினால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரும் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர். (நி-6-299)

# 82 போத்தல் கசிப்புடன் தருமபுரத்தில் ஒருவர் கைது

(தருமபுரம்)



தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய, தகவலுக்கு அமைய 82 போத்தல் கசிப்பும் 238 லீற்றர் கோடாவும் அத்துடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணாங்களும் மீட்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-6-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 240 | 240 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 580 | 550 | 600 | 600 |
| தக்காளி | 300 | 280 | 280 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 350 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 350 |
| கரட் | 250 | 350 | 370 | 400 |
| பூசணி | 180 | 230 | 180 | 200 |
| புடோல் | 200 | 120 | 160 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 200 |
| பாகற்காய் | 380 | 300 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 100 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 250 |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 | 240 |
| லீக்ஸ் | 280 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 260 | 200 | 250 | 300 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 350 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 440 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | -- | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 280 | 400 |
| முள்ளங்கி | 160 | 100 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 70 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | -- | 120 |

# இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழகம் சென்ற வெளிநாட்டவர் கைது

(மன்னார்)



இலங்கையில் இருந்து கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் தமிழகத்திற்கு சென்ற போலந்து நாட்டை சேர்ந் தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர் இலங்கையில் குற்றச்செயல் ஒன்றுடன் தொடர் புடைய குற்றத்தில் கைதாகி சிறைத்தண்டனை அனுபவித்து, தண்டனைக்காலம் முடிவடைந்து விடுதலை செய்யப்பட்டவர் என தெரிய வந்துள்ளது.

தமிழகம் வேதாரண்யம் அருகே முனங்காடு பகுதியில் அநாதரவான நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படகொன்று மீட்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்தே இந்த படகின் மூலம் தமிழக த்தினுள் ஊடுருவி இருக்கலாம் என தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் சந்தேகம் கொண்டு, கடலோர பாதுகாப்பு பிரிவினர், க்யூ பிரிவினர் என பல்வேறு பட்ட தரப்பினரும் தீவிர விசார ணைகளை முன்னெடுத்தனர். (நி-6-33)



வடமராட்சி உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் 2022 ஆம் ஆண்டுக்கான "செயற்பட்டு மகிழ்வோம்" விளையாட்டு நிகழ்வு மேற்படி முன்பள்ளி முன்றலில் கடந்த சனிக்கிழமை சபைக் குரு அருட்திரு.செ.துரைரட்ணம் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.
(படம்:ரவிசாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபர் கைது



(கரணவாய்)

நெல்லியடி நகரில் தொடர்ச்சியாக துவிச்சக்கரவண்டிகளை திருடிவந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் ஒரு தொகுதி துவிச்சக்கர வண்டிகளும் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்ற திருட்டு தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளிற்கு அமைவாக விசாரணைகளை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய நபரைக் கைது செய்ததுடன் ஒரு தொகுதி துவிச்சக்கரவண்டிகளையும் மீட்டதாக தெரிவித்தனர்.

(நி-6-60)



ஊரெழு மேற்குப் பகுதியில் வறிய நிலையிலுள்ள 40 குடும்பங்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளையினரால் வாழ்வாதார உதவியாக உலர் உணவுப் பொருட்கள் ஸ்ரீ சத்திய சாயி பாபா, சீரடி பாபா மண்டல ஆலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

(படம்-ரவிஷாந்)

## நிர்வாக சபைத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

பலாலிகண்ணார்வயல் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பரிபாலன சபை பொதுக் கூட்டமும் நிர்வாகசபை தெரிவும் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை பலாலி வடக்கு அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

இவ் நிர்வாகத் தெரிவில் தலைவராக த.நவரத்தினமும், செயலாளராக கு.வில்வராசாவும், பொருளாளராக ச.கணேசகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (நி-6)



இலங்கை செஞ்சிலுவை சங்கம் யாழ்ப்பாண கிளை பருத்தித்துறை பிரிவால் வீட்டுத்தோட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் வியாபாரி மூலை பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்- மகாலிங்கம்)

# திருட்டில் ஈடுபட்டவரை மடக்கிப் பிடித்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பகுதியில் உள்ள வீடொன்றில் திருட்டில் ஈடுபட்ட வேளை அயலவர்களால் பிடிக்கப்பட்ட இளைஞனிடம் இருந்து சிறிய ரக கத்தி மற்றும் ஓடிக்கொலோன் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பத்தமேனி பகுதியில் வீட்டில் தனியே வசிக்கும் பெண்ணொருவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த இளைஞன் சென்று வீட்டு வளாகத்தை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வேலை முடிந்து சம்பளத்தையும் வாங்கிக்கொண்டு சென்றுள்ளார்.

அதன் பின்னர் வீட்டில் இருந்த பெண்மணி தனது இரண்டு பெறுமதியான கைபேசிகள் காணாமல் போயிருந்தமை தொடர்பில் அறிந்து அயலவர்களிடம் அது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

இரவு மீண்டும் அந்த இளைஞன் சாப்பாட்டு பார்சல் ஒன்றுடன் அந்த பெண்மணியின் வீட்டுக்கு வரும் போது அயலவர்கள் மடக்கிப் பிடித்தனர்.

அதனை அடுத்து குறித்த நபரின் உடைமையில் இருந்து சிறிய ரக கத்தி, ஓடிக்கொலோன் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டதையடுத்து அயலவர்கள் குறித்த இளைஞனை அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(நி-6-18-33-104)

## அளவெட்டி வெளிவயல் முத்துமாரியம்பாள் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு-வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழாவும், அடுத்த நாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (நி-6)

# தனங்கிளப்பில் இடம்பெற்ற வெட்டுச் சம்பவத்தில் மூவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு வீதிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வெட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் தனங்கிளப்பு வீதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 40 மற்றும் 44 வயதுடைய சகோதரர்களுடன் 34 வயதுடைய பெண் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் ஆபத்தான நிலையில் உள்ள 44 வயதுடைய நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வன்முறைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(நி-6-30)

# இராசிபலன்

26.07.2022 ஆடி 10, செவ்வாய்க்கிழமை
திருவாதிரை பின்னிரவு 5.47 மணிவரை
சுப நேரம் -10.32-12.02 மணிவரை
திரியோதசி முன்னிரவு 7.59 மணிவரை இராகு காலம் -3.02-4.32 மணிவரை
பிரதோச விரதம், ஆடிச்செவ்வாய்
சந்திராஷ்டமம்- அனுசம்

வளவன்

**மேஷம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வெற்றி தரும் செய்திகள் வீடு வந்துசேரலாம்.

**கடகம்** உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் ரீதியான அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**துலாம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மகரம்** உற்சாகத்தாடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உடல் நலன் சீராகும், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், நிதி நிலை உயர வழிவகை செய்வீர்கள், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் கூடும்.

**சிம்மம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்துசேரலாம்.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகலாம், வழிபாட்டால் மன அமைதி காண வேண்டிய நாள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.

**மிதுனம்** உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், செய்தொழிலில் ஆர்வத்துடன் கலந்து கொள்வீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு** குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

தன்னம்பிக்கையும் துணிச்சலும் சிகர வாழ்வின் இரு சக்கரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 வாரங்களில் 9 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

**நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதம் சடுதியாக அதிகரித்து வருகிறது. கடந்த 3 வாரங்களுக்குள் சுமார் 9 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலைமை அதிதீவிர நிலையை அடைவதற்கு முன்னர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 3 வாரங்களில் சுமார் 9000 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையை உடனடியாக கட்டுப்படுத்தி, டெங்கு நோய் பாரதூர நோய் நிலைமையாக பரவுவதைத் தடுக்க வேண்டும்.

இவ்வாண்டில் இது வரையான காலப்பகுதியில், அதாவது சுமார் 7 மாதங்களில் 44 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரித்து வருவதால், டெங்கு நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அவற்றை உதாசீனப்படுத்தாது, உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

## பணிப்பகிஷ்கரிப்பால் தொடருந்து திணைக்களத்திற்கு பாரிய நட்டம்

(கொழும்பு)

தொடருந்து நிலைய அதிபர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக தொடருந்து திணைக்களத்திற்கு சுமார் ஒரு கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 6 மணி முதல் நேற்று முன்தினம் பிற்பகல் வரை, தொடருந்து பயணச்சீட்டு வழங்கும் செயற்பாட்டிலிருந்து விலகியிருந்த போதிலும், தொடருந்து சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

பணிப்பகிஷ்கரிப்பின் போது தொடருந்து திணைக்களத்திற்கு நட்டம் ஏற்பட்டால் அதற்கு தமது தொழிற்சங்கம் பொறுப்பேற்காது என தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார். (நி)

## நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதிக்கு அவகாசம் வழங்குங்கள்

### ஜப்பானின் பிரதம சங்கநாயக்கர் கோரிக்கை

(கொழும்பு)

நீண்டகால அரசியல் அனுபவமுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நாட்டை கட்டியெழுப்ப கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென கோட்டை விகாரை தரப்பின் பதிவாளர், ஜப்பானின் பிரதம சங்கநாயக்கர் பெல்பொல விபஸ்சி நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

போராட்டங்களை நடத்தி ஆட்சியாளர்களை விரட்டியடிக்கும்முறையை விட்டு விட்டு, தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை விடுவித்து மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தேரர் சுட்டிக் காட்டியுள்ளார். நாடு பேரழிவை எதிர் நோக்கியிருக்கும் வேளையில், தற்போதைய ஜனாதிபதி அச்சமின்றி சவாலை ஏற்றுக்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய தேரர், சகல சவால்களையும் வெற்றி கொள்ள அவரால் முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சேதவத்த, வெஹெரகொட புராதன விகாரைக்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்ட வேளையில், அங்கு உரை நிகழ்த்திய தேரர் இதனைக் குறிப்பிட்டார். (நி)

## ரணிலுக்கு வாழ்த்து தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதி புடின்





(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் வாழ்த்துக்களை தூதுவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மெட்ரிக்கிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு ரஷ்ய ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"எங்கள் மக்களின் நலன்களுக்காகவும் பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்தும் நலனுக்காகவும் பல்வேறு துறைகளில் ஆக்கபூர்வமான இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி என்ற முறையில் உங்களது செயற்பாடுகளை நான் எதிர்பார்க்கிறேன்" என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேலும் தெரிவித்துள்ளார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 22 ½ சூரி 9 செவ் 7 இல்
உயரம்: 180 cm
தகைமை/தொழில்: A/L லண்டன்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12814

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: சூரி 10 செவ் 5 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: (MSc, BSc) Engineer (தனியார்)
எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்
தொ.இ: B/12821

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: சூரி 5 செவ் 8 இல்
உயரம்:6'
தகைமை/தொழில்: BSc Electronic Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்
தொ.இ: B/12822

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம் : திருவோணம் 2
கி.பா:84 சூரி 2 செவ் 1 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: வாகனம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12825

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 5 சூரி 11 செவ் 12 இல்
உயரம்:5'7"
தகைமை/ தொழில்: BSc விவசாய போதனாசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: G/12819

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: சூரி 4 செவ் 7 இல்
உயரம்: 153 cm
தகைமை/தொழில்: BBM ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம் ஆசிரியர் விரும்பத்தக்கது உள்நாடு மட்டும்
தொ.இ: G/12824

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: 2 ¾ சூரி . செவ் 5 இல்
தகைமை/தொழில்: நில அளவையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/12828

பிறப்பு:1981 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 1
கி.பா :31 ¾ சூரி 7 செவ் 5 இல்
உயரம்:5'2"
தகைமை/ தொழில்:A/L
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில் வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ:G/12829

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மாப்பிள்ளை யாரோ?

(நேற்றைய தொடர்ச்சி)

மருதப்பரின் நல்ல மனதைப் புரிந்து கொண்ட மாணிக்க வாசகம் மேற் கொண்டு எதுவும் கேட்கவில்லை. சற்று நேரத்தில் வண்டியும் மலையூர் எல்லைக்கு வந்துவிட்டது. அப்போது ஒருவன் ஒரு கிழ எருதை இழுத்துக் கொண்டு மலைக்காட்டின் பக்கம் போவதை மருதப்பர் கண்டார்.

உடனே அவர் "ஏய் குப்பா! ஏன் கிழ மாட்டை இப்படி இழுத்து கொடுமைப் படுத்துகிறாய்? உன் எஜமானர் சிவசங்கரன் பார்த்தால் என்ன நடக்கும் தெரியுமா?" என்று கேட்டார். குப்பனும் மருதப்பரை வணங்கி "ஐயா! இதை எஜமானர் தான் இழுத்துப் போய் காட்டில் விட்டு விடச்சொன்னார். இது கிழடாகி விட்டதாம் வேலைக்குப் பயன் படாதாம் இதற்குத் தீனி போடுவதும் தண்டமாம்" என்றான்.

அதைக் கேட்ட மருதப்பர் "அட பாவமே! இத்தனை நாளாக இது உழைத்ததே. கிழடாகி விட்டதால் விரட்டி விட வேண்டுமா காட்டில் விட்டால் இதை ஓநாயோ புலியோ கொன்று விடுமே.



என் மாட்டுக் கொட்டிலில் கொண்டு போய்க்கட்டு நான் தீனி போட்டு கவனித்துக் கொள்கிறேன். பயப்படாதே நான் சிவசங்கரனிடம் சொல்லிக் கொள்கிறேன் என்றார் . குப்பனும் அவர் சொன்னபடி அவரது மாட்டுக் கொட்டிலுக்கு அந்தக் கிழ மாட்டை ஓட்டிச் சென்றான்.

மருதப்பர் தம் வீட்டு வாசலில் வண்டியிலிருந்து இறங்கிய போது அவர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த கிழவர் எழுந்து வந்து மருதப்பா என் இரண்டு மகன்களும் என்னை வீட்டை விட்டு விரட்டி விட்டார்கள். அதனால் இங்கு வந்து விட்டேன் என்னைக் கைவிட மாட்டாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றார்.

மருதப்பரும் "இதென்ன பேச்சு அண்ணா! நீங்கள் வேறு நான் வேறா? இது உங்கள் வீடு தானே. தாராளமாக இங்கேயே இருக்கலாம்" என்று கூறி விட்டு வண்டியிலிருந்த மாணிக்க வாசகரிடம் ஐயா! நீங்கள் என் வீட்டிற்குள் வந்து சற்று இளைப்பாறி தாக சாந்தி செய்து கொண்டு பிறகு சிவ சங்கரனின் வீட்டிற்குப் போகலாம்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## முத்துமணி மாலை செய்த லீலை




ஆனால், மாசாத்துவான் குடும்பம் அப்படியில்லை. செல்வத்தில் அரசருக்கு அடுத்த நிலையில் இருந்தவர்கள் அவர்கள். ஆகவே, கோவலனுக்கு ஆயிரத்தெட்டு பொன் என்பது ஒரு பெரிய தொகையே இல்லை.

பல பொருட்கள் தங்களுக்கு தேவையோ இல்லையோ, தங்களின் சமூக அந்தஸ்தைக் காட்டிக் கொள்வதற்காகவே வாங்குவார்கள் .அது பணக்காரர்களின் இயல்பு.

கோவலன் அந்த மாலையை வாங்க முடிவு செய்ததற்கு அங்கிருந்த அத்தனை பணக்கார இளைஞர்கள் முன்பும், நான் உங்களைவிட ஒரு படி மேலானவன் என்று காட்டிக் கொள்கிற துடிப்பு மட்டுமில்லை, அதற்கு அப்பாற்பட்ட ஒரு காரணமும் இருந்தது.

யார் அந்த மாதவி? நிஜமாகவே அவள் அத்தனை பேரழகியா? என் மனைவி கண்ணகியைக் காட்டிலும் அழகானவளா? அப்படியானால் அவளைப் பார்த்தே ஆக வேண்டும்.ஆவல் தூண்டிய அடுத்த நொடியே ஆயிரத்தெட்டு பொன் கொடுத்து கோவலன் அந்த மாலையை வாங்கினான்.

மாலையை விற்ற பெண் கோவலனை வணங்கினாள். அவனை மாதவியின் வீட்டுக்கு அழைத்துப் போனாள். அப்போது, கோவலன் மனத்தில் மாதவி என்கிற பேரழகியைச் சந்திக்கிற ஆர்வம் மட்டும் தான் இருந்தது.

அந்தச் சந்திப்பு தன் வாழ்க்கையையே திசைமாற்றி அலைக்கழிக்கப் போவது தெரிந்திருந்தால், ஒரு வேளை அவன் அங்கே போகாமலே இருந்திருப்பானோ என்னவோ!

மாதவியைப் பார்த்த நொடியில் கோவலன் மனத்தில் இருந்த ஆர்வம் ஆச்சரியமாக மாறியது.

ஆஹா! எனக்கா? இந்தப் பேரழகி எனக்கே எனக்கா. இவளைப் பெற்றெடுத்தார்களா அல்லது தேர்ந்த சிற்பியிடம் செய்து வாங்கினார்களா இவ்வளவு கச்சிதமான அளவுகளும், வளைவுகளும் ஒரு பெண்ணுக்கு அமைவது சாத்தியமா? வேல் விழிகள் என்று கவிஞர்கள் சொல்வது மிகையில்லை போலிருக்கிறதே! இந்தக் கொடி இடை அதன் மேலிருக்கும் பூரண கும்பங்களின் பாரத்தைத் தாங்குமா?

இந்த எண்ணம், கோவலனைத் தன்னை அறியாது மாதவியின் இடையைத் தாங்கிப் பிடிக்க வைத்தது.

மாதவி ஒரு தன்னிச்சையான சிலிர்ப்பில் இடையை ஒரு வெட்டு வெட்டி விலகினாள்.கைகளை நளினமாக வளைத்து உயர்த்தி கூப்பினாள். அப்போது கோவலன் மனத்தில் கிண் என்ற மத்தள ஒலி கேட்டது. மாதவியின் அசைவுகள், இடுப்பை வளைத்து இரு கைகளாலும் புஷ்பாஞ்சலி செய்யும் நடன முத்திரையாகத் தெரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது. ~ செனேக்கா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதுவரை நீங்கள் கேட்டது ஆனந்தனின் பேச்சு!

இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் ஞாயிறு தோறும் காலை 10 மணிக்கு கதம்பம் என்ற நிகழ்வு இடம்பெறும்.

அதில் இடம்பெற்ற நாடகம்தான் இது.

ஆனந்தன் என்பவர் வானொலியில் பேசுவதற்காக கொழும்பு செல்கிறார்.

வானொலியில் பேச வேண்டும் என்ற அவரின் நீண்ட நாள் ஆசை நிறைவேறப் போகிறது.

தன்னிடம் இருந்த ரேடியோவை தனது நெருங்கிய நண்பரிடம் கொடுத்து; இன்ன திகதியில் நான் ரேடியோவில் பேசுவன். எனது பேச்சு எப்படியிருக்கிறது என்பதை நீ கேட்டு எனக்குச் சொல்ல வேண்டும் எனக் கூறி விட்டுக் கொழும்பு செல்கிறார்.

உரிய நாள் வந்தது. நண்பர் ரேடியோவை எடுத்து ஆனந்தனின் பேச்சைக் கேட்பதற்கு தயாரானார்.

குறித்த அலைவரிசையை அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

நேரம் நகர்ந்து போகிறது. நண்பரின் மனமும் திக் திக் என்றாகிறது.

எங்கே ஆனந்தனின் பேச்சைக் கேட்க முடியாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் அவரை தொட்டுக்கொள்ள, மீற்றர் கட்டையை அங்கு மிங்குமாக நகர்த்துகிறார்.

குறித்த அலைவரிசை கிடைத்துவிட்டது மகிழ்ச்சி. ஆனாலும் அந்த வானொலியில் வந்த அறிவிப்பு **இதுவரை நீங்கள் கேட்டது ஆனந்தனின் பேச்சு** என்பதாக இருந்தது.

இப்போது அந்த நண்பரின் மனநிலை எப்படியிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அந்த மனநிலையோடு சற்றுத் திரும்புங்கள்.

நீண்ட நேரம் காத்து நின்று எரிபொருள் நிலையத்தை அண்மித்து இன்னும் சில நிமிடங்களில் பெற்றோல் கிடைத்துவிடும் என்ற அகமகிழ்வில் நிற்கும்போது, வந்த செய்தி பெற்றோல் முடிந்துவிட்டது என்பதாக இருந்தது.

என்ன செய்வது எம் தலைவிதியை நொந்து கொள்வதா? அல்லது இன்றைய இராசிபலன் சரியில்லை என்று நினைப்பதா? அல்லது எரிபொருள் பங்கீட்டு அட்டையைப் பெற்றுக் கொண்டது சனி ஓரையில் போலும் என்று எண்ணுவதா? எதுவும் புரியவில்லை.

பெற்றோல் முடிந்துவிட்டது என்ற அறிவிப்போடு எரிபொருள் நிலையத்துக்கு வேலியிடப்படுகிறது.

ஏதோ பழுத்த அரசியல் தலைவர் இறந்து விட்டதால் செய்யப்படும் பந்தோபஸ்துப் போல.

வரிசையில் காத்து நின்றவர்களும் இறுதி மரியாதை செலுத்த நின்ற நினைப்பில் எரிபொருள் நிலையத்தை பார்த்து அஞ்சலிக்கின்றனர்.

எரிபொருள் கிடைக்காததால் மனம் எரிகின்றது. சரி நாளை பார்க்கலாம் என்று மனதைத் தேற்ற, எம்மோடு கூட இருந்த மோட்டார் சைக்கிள் நாளை என் இலக்கமும் இல்லை உன் இலக்கமும் இல்லை. அப்படியானால் நாளைய தினம் எப்படி உனக்குப் பெற்றோல் கிடைக்கும் என்றது.

மௌனமாக நின்று கண்களைத் துடைக்க, எரிபொருள் பங்கீட்டு அட்டை என்னைப் பார்த்து சொல்கிறது.

மகனே! நீலம், வெள்ளை, றோஸ் இந்த வர்ணங்கள் உன்னை குழப்புவதற்கான அட்டைகள்.

இதில் நீ தெளிவடைந்தால் உன்னை ஏமாற்றுவதற்கான அடுத்த அட்டைதான் கியூஆர் கோட்.

ஏதோ! நீ தமிழன் சமாளித்துக்கொள்.

## பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கு கொள்ள மாட்டேன்

### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கம் விடுத்த கோரிக்கையை நிராகரித்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

குழுக்கூட்டத்தில்பங்கேற்குமாறு கோரி தனக்கு தொலைபேசி அழைப்பு வந்ததாக கூறினார். இன்று 26ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நிதியமைச்சின் புதிய கட்டட கேட்போர் கூடத்தில் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் குழுக் கூட்டத்தில் பங்கேற்குமாறு ஒரு பெண்மணியிடமிருந்து தனக்கு அழைப்பு வந்தது. குழுக் கூட்டம் பற்றி தாம் விசாரித்தபோது, அது ஆளும் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட குழுக் கூட்டம் என்று அழைத்தவர் கூறினார் என்றும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது என்று அவர் தெரிவித்தார்.

எனினும், தாங்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருப்பதால் அந்தக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று நாணயக்கார குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் உள்ள 158 உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதன்போது அரசாங்கம் தங்களுக்கு ஆதரவாக வாக்களித்த எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை சமாதானப்படுத்த முயற்சிக்கும் என்று தாம் நம்புவதாக வாசுதேவ குறிப்பிட்டார். (ம-7)

### அல்வாய் தெற்கில்

## தோட்டத்துக்குச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

(கரணவாய்)

தோட்டத்துக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்:

இவ்வாறு மரணமடைந்தவர் மாவோடை அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பாலச்சந்திரன் (வயது - 65) என்பவராவார்.

நேற்று திங்கட்கிழமை காலை வெங்காயம் நடுகை செய்வதற்காக தோட்டத்திற்கு சென்று நடுகை செய்வதை மேற்பார்வை செய்ததன் பின்னர் வீட்டுக்கு திரும்பியவர் மயங்கி சரிந்து விழுந்துள்ளார்.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## தனிமையில் வசித்த பெண் படுகொலை

(கொழும்பு)

வீடொன்றினுள் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெலம்பொட, பரணபட்டிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார் எனவும், அவரின் கழுத்தில் வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

68 வயதுடைய வயோதிப் பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வெலம்பொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இராணுவ சிப்பாயிடமிருந்து கொள்ளையிடப்பட்ட ரீ-56 ரக துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

பத்தரமுல்லை - பொல்துவ சந்தியில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தின்போதான மோதலில், கடமையிலிருந்த இராணுவ சிப்பாய் ஒருவரை தாக்கி, அவரிடமிருந்து ரீ-56 ரகத்தைச் சேர்ந்த துப்பாக்கியொன்று இனந்தெரியாதோரால் கொள்ளையிடப்பட்டது.

இவ்வாறு காணாமல் போயிருந்த துப்பாக்கி, ராஜகிரிய சமனல பாலத்தின் கீழ் (பாராளுமன்றம் திசையாக) தியவன்னா ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 23ஆம் திகதி கடற்படை சுழியோடிகள் குறித்த துப்பாக்கியுடன் வெற்று தோட்டாப் பையொன்றையும் மீட்டு, வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

### மீசாலை தெற்கில்

## குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை தெற்குப் பகுதியில் உள்ள வெற்றுக் காணியொன்றில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 64வயதான 5 பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை 27 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## படையினர் தொடர்பில் முகநூலில் தவறான பதிவு சந்தேகநபர் மறியலில்

பாதுகாப்பு படையினரை குறிவைத்து முகப்புத்தகத்தில் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை பதிவிட்டதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர், எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை காலி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினரை குறிவைத்து முகப்புத்தகத்தில் வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை பதிவிட்டதாக குறித்த நபர் நேற்று கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 36

உக்ரைன் வாழ் மக்களுக்கு குடியுரிமை இன அல்லது மொழிக்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட அடிப்படையில் நீடிக்கப்பட்டது. உக்ரைன் பரவலான சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றது. மற்றும் அதன் இராஜதந்திர சேவையை மேம்படுத்தியது. மேற்கத்தேய சார்பு வெளியுறவுக் கொள்கை நிறுவப்பட்டது, மேலும் உக்ரைன் ஒரு "யூரேசிய" நாடு என்பதை விட "ஐரோப்பிய" என்று உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வலியுறுத்தின.

முதலாம் உலகப் போருக்குப் பிந்தைய உக்ரைனிய தேசிய குடியரசின் மாநில சின்னங்களும் தேசிய கீதமும் மீண்டும் நிறுவப்பட்டன. சுதந்திரமான உக்ரைன் மாநிலத்தின் பண்புகளைப் பெற்ற அதே நேரத்தில், அது வளர்ந்து வரும் நாட்டைக் கடுமையாகக் கஷ்டப்படுத்தும் பல சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை எதிர்கொண்டது. சுதந்திர நாடுகளின் கொமன் வெல்த் (CIS) இல் அதன் பங்கேற்பின் தன்மை, அணு ஆயுதக் குறைப்பு, கிரிமியாவின் நிலை மற்றும் கருங்கடல் கடற்படை மற்றும் அதன் துறைமுக நகரமான செவஸ்டோபோல் ஆகியவற்றின் கட்டுப்பாடு. எல்லையின் இருபுறமும் உணர்ச்சிகளைத் தூண்டும் அதேவேளையில், இந்த பிரச்சினைகள் ரஷ்யாவுடனான உக்ரைனின் புதிய உறவை வரையறுக்க உதவியது.

உக்ரைனிய தலைவர்கள் CIS ஆனது முன்னாள் சோவியத் குடியரசுகளின் ஒரு தளர்வான சங்கமாகவும் சில விடயங்களில் உதவுவதற்கான ஒரு வழிமுறையாக இருப்பதை விட அதிகமாக இல்லை என்று உணர்ந்தனர். இதற்கு நேர்மாறாக, ரஷ்யா அதை ஓரளவு பிராந்திய ஒருங்கிணைப்பை (மொஸ்கோவின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ்) தக்கவைத்துக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகக் கருதியது.

**ரஷ்யா சுதந்திர நாடுகளின் கொமன்வெல்த் (CIS) ஐ ஓரளவு பிராந்திய ஒருங்கிணைப்பை (மொஸ்கோவின் அரசியல் ஆதிக்கத்தின் கீழ்) தக்கவைத்துக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகக் கருதியது. ஆனால் அதற்கு உக்ரைனிய தலைவர்கள் உடன்படவில்லை.**

மேலும் CIS ஆனது முன்னரிருந்த சோவியத் ஒன்றியத்தை ஒத்த அமைப்பாக நிறுவ முயன்றது. CIS ஐ உருவாக்கிய கூட்டத்தில் இந்த மாறுபட்ட கருத்துக்கள் தெளிவாக இருக்கவில்லை, ஆனால் சில வாரங்களுக்குள் அவை மிகவும் தெளிவாகத் தெரிந்தன. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. உக்ரைன் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டளையின் கீழ் CIS இராணுவம், பொதுவான CIS குடியுரிமை மற்றும் உக்ரைனிக் தேசிய எல்லைகளைக் காட்டிலும் வெளிப்புப் பாதுகாப்பிற்கான எல்லை போன்ற முன்மொழிவுகளை நிராகரித்தது. CIS உடனான ஈடுபாடு அதன் இறையாண்மையை சமரசம் செய்யாமல் விழிப்புடன் இருந்து, உக்ரைன் ஒரு இணை உறுப்பினராக மட்டுமே பங்கேற்றது.

எவ்வாறாயினும், சுதந்திரம் அடைந்து ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக, CIS ஆல் இனி நாட்டின் இறையாண்மைக்கு உண்மையான அச்சுறுத்தலாக இல்லாத நிலையில், உக்ரைன் இறுதியாக மார்ச் 1999 இல் CIS பாராளுமன்றங்களுக்கு இடையேயான சட்டசபையில் (CIS Interparliamentary Assembly) சேர ஒப்புக்கொண்டது.

அணு ஆயுதக் குறைப்புப் பிரச்சினை ஒரு வேதனையான ஒன்றாக நிரூபிக்கப்பட்டது. செர்னோபில் பேரழிவை அடுத்து, உக்ரைனில் அணுக்கரு எதிர்ப்பு மக்கள் உணர்வு அதிகமாக இருந்தது சுதந்திரத்திற்கு முன்பே, உக்ரைனிய தலைவர்கள் அணு ஆயுதங்களை நாட்டிலிருந்து அகற்றுவதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆனால் அந்தக் காலகட்டம் முழுவதும், உக்ரைனியர்கள் தங்கள் மண்ணில் உள்ள அணு ஆயுதக் களஞ்சியத்தின் அளவைப் பற்றி அறிந்திருக்கவில்லை - உக்ரைன் அந்த நேரத்தில் உலகின் மூன்றாவது பெரிய அணுசக்தி சக்தியாக இருந்தது - அல்லது அணுசக்தி விநியோகத்தின் அதிக செலவுகள் மற்றும் தளவாட சிக்கல்களை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை.

உக்ரைன் தன் நாட்டிலிருந்து ஆயுதங்களை முழுமையாக அகற்றுவதற்கு முன் அதன் பாதுகாப்பிற்கான சில உத்தரவாதங்கள், ஆயுதங்களை அகற்றுதல் மற்றும் அதைக் கொண்டு செல்வதற்கான நிதி இழப்பீடுகள் பெறுதல் போன்றவை பற்றிய தனது கருத்தினை வெளிப்படுத்தியது.

**1992 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏறக்குறைய பாதி ஆயுதக் களஞ்சியங்கள் ரஷ்யாவிற்கு மாற்றப்பட்ட பிறகு, சுதந்திர உக்ரைனின் தலைவர்கள், உக்ரைனின் பிரதேசத்தின் சில பகுதிகளை (அதாவது கிரிமியா) இப்போது உரிமை கோரும் ஒரு எதிரியிடம் கண் மூடித்தனமாக ஆயுதங்களை ஒப்படைப்பதன் ஞானம் குறித்து கேள்வி எழுப்பத் தொடங்கினர்.**

இந்த வெளிப்பாடு மேற்கு (குறிப்பாக அமெரிக்காவில்) மற்றும் ரஷ்யாவில் பெரும் கவலையை ஏற்படுத்தியது.

(தொடரும்)

# குடியரசுத் தலைவராக பதவியேற்றார் திரௌபதி முர்மு



(டில்லி)

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி முன்னிலையில் இந் தியாவின் 15 ஆவது குடியரசுத் தலைவராக திரௌபதி முர்மு பதவியேற்றுக் கொண்டார்.

டில்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தியதை அடுத்து பாரம்பரிய முறைப்படி திரௌபதி முர்மு குடியரசுத் / . தலைவராக நேற்று பதவியேற்றார்.

பாராளுமன்ற மண்டபத்தில் நடைபெற்ற இந்த பதவியேற்பு நிகழ்வில் பிரதி குடியரசுத் தலைவரும் மாநிலங் களவைத் தலைவருமான வெங்கையா நாயுடுவும் கலந்து கொண்டார்.

மேலும் பிரதமர் நரேந்திர மோடி, மக்கள வைத் தலைவர், மத்திய அமைச்சர்கள், எதிர்க் கட்சியினர் ஆளுநர்கள், மாநில முதல்வர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (நி)

# ஜனநாயக ஆர்வலர்கள் நால்வரை தூக்கிலிட்டது மியன்மார்

(மியன்மார்)

பயங்கரவாத செயல்களுக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு ஜனநாயக ஆர்வலர்களை மியன்மாரின் இராணுவ அதிகாரிகள் தூக்கிலிட்டுள்ளனர்.

பல தசாப்தங்களின் பின்னர் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட முதல் மரணதண்டனை இது வென சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவத்தை எதிர்த்துப் போராட, போராளிகளுக்கு இவர்கள் உதவியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த தண்டனைகள் சர்வதேச கண்டனத்தை ஈர்த்துள்ள அதேவேளை, மக்கள் மத்தியில் பயத்தைத் தூண்டும் மோசமான முயற்சி என ஐ.நா. நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவர் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆங்சான் சூகியின் நெருங்கிய கூட்டாளி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஹெய்ட்டியில் அகதிகளுடன் சென்ற படகு கவிழ்ந்து விபத்து - 17 பேர் பலி

(ஹெய்ட்டி)

ஹெய்ட்டி அகதிகளை ஏற்றிச் சென்ற படகொன்று பஹாமாஸ் கடற்கரையில் மூழ்கியதில் 17 பேர் உயிரிழந்தனர். 25 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பஹாமாஸ் பிரதமர் பிலிப் டேவிஸ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உயிரிழந்த ஒரு கைக்குழந்தை, நான்கு பெண்கள் உட்பட 17 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## 'சகுராஜிமா' எரிமலை வெடித்தது

(டோக்கியோ)



தெற்கு ஜப்பான் - ககோஷிமாவில் உள்ள சகுராஜிமா எரிமலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வெடித்து எரிமலைக் குழம்புகளை வெளியிட ஆரம்பித்தது. பெருமளவு சாம்பலும் எரிமலையில் இருந்து வெளியேறி வருகிறது.

இதனையடுத்து சகுராஜிமா மலைப்பகுதியைச் சூழவுள்ள மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு வலியுறுத்தப்பட்டனர். (நி)

## கலிபோர்னியாவில் காட்டுத் தீ

### அவசர நிலை அறிவிப்பு

(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பற்றி எரியும் காட்டுத் தீ காரணமாக அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் மிட்பைன்ஸ் நகருக்கு அருகிலுள்ள பூங்காவில், ஒக் மரங்களில் சமீபத்தில் ஏற்பட்ட தீ, அருகிலுள்ள வனப்பகுதிகளுக்கு 48 சதுர கிலோமீற்றர் தூரத்திற்கு பரவியுள்ளது.

அந்த பகுதியில் இருந்த ஏராளமான வீடுகள், மரங்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன. 6,000 இற்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு, பர்துகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 10 கட்டடங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. இதையடுத்து, அந்த மாகாண கவர்ணர்கவின் நியூசோம் அவசர நிலையை அறிவித்துள்ளார். (நி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவில்...

ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கான செலவை ஏற்க நிறுவனங்கள் இருப்பதாகவும் அதற்கு ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கொடுப்பனவும் பெறாமல் தேர்தல் கடமைகளில் ஈடுபடத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளதால், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தலை நடத்துவது பெரிய பிரச்சினையாக இருக்காது என மகிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## "கோட்டா கோ...

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக சட்டவிரோதமாக கூடியிருந்த குற்றச்சாட்டின் பேரில் இந்த பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழில் 50 வீத...

கம்பனிகளின் இணைய அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களில் யாழ். மாவட்ட செயலக மேற்பார்வையில் எரிபொருளை பெற்றுத்தர அரச அதிபரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் தனியார் பேருந்துகளை மீள இயக்க தீர்மானித்துள்ளோம் என்றார்.

எரிபொருள் பெறுவதிலுள்ள சிக்கல்கள் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட தனியார் பேருந்துகள் உள்ளூர் மற்றும் வெளியூரில் நேற்று திங்கட்கிழமை சேவையில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,18,33,104)

## யாழில் இ.போ.ச...

பகிஸ்கரிப்பு இடம்பெற்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் மக்கள் பொதுப் போக்குவரத்தை நம்பி இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இரண்டு நாட்களாக பேருந்து சேவைகள் இடம்பெறாமையால் மக்கள் கடும் இன்னல்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில் இ.போ.ச ஊழியர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டவர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளநிலையில், பேர்ராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முகக்கவசம்...

அபாயம் காணப்படுவதாகவும் அதனால் பரவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்தார்.

இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக விலகல் மற்றும் கைகளை கழுவுதல் போன்ற ஏனைய சுகாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட வேண்டுமென அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கோவிட்-19 தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

## கடுமையான முடி...

கடுமையான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தினால் இலங்கை மீண்டும் முன்னைய நிலைக்கு செல்வதற்கு ஐந்து வருடங்களாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மீட்சிக்கு வலியுடனான சிகிச்சை அவசியம். பேரழிவு நிலையை தவிர்ப்பதற்கு ஜனாதிபதி அனைத்து கடினமான தீர்மானங்களையும் எடுப்பார் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க பொருளாதார ரீதியிலான அறிவு மிக்கவர். என்ன செய்யவேண்டும் என்பது அவருக்கு தெரியும. அரசியல் இயக்கவியல் நாட்டை தற்போதைய நிலைக்கு தள்ளியுள்ள மக்களை கவர்வதற்கான ஜனரஞ்சக நச்சு அரசியல் ஆகியவற்றின் காரணமாக ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஏனைய அரசியல்வாதிகளிற்கும் அவற்றை செய்ய முடியாமல் போயுள்ளது என்றார். (ம-7)

## எதிர்வரும் 12 மா...

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக எதிர்வரும் 12 மாதங்களில் எரிபொருள் இறக்குமதி வரையறை செய்யப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் [illegible] இதனை [illegible]

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அனைத்து நிரப்பு நிலையங்களுக்கும் நாளாந்தம் எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர், மொத்தமாக எரிபொருள் கிடைத்தாலும் கூட அது தேவைக்கு போதுமானதாக இல்லை எனக் கூறியுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் தேசிய எரிபொருள் அனுமதி அட்டையை கட்டாயப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாகனப் பதிவு இலக்கத்தின் கடைசி எண்ணுக்கு அமைய, எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி வரை மாத்திரமே எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படும் எனவும் அதன்பின்னர் தேசிய எரிபொருள் அனுமதி அட்டைக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிரப்பு நிலையங்கள் மற்றும் லங்கா ஐஓசி வலையமைப்பினூடாகவும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சர்வதேச நாணய...

அமைதியான போராட்டங்கள் வன்முறையாக மாறியமையே இந்தத் தாமதத்துக்கான காரணம் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டங்கள் காரணமாக கடந்த வாரம் இலங்கைக்கு பயணம் செய்யவிருந்த உலக உணவுத் திட்டத்தின் தலைவர் தனது பயணத்தை ஒரு மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

இலங்கையில் போராட்டங்கள்வன்முறையாக மாறியதன் காரணமாக கிளர்ச்சியாளர்களை விரும்பாத நிலையில் இலங்கையர்களுக்கு கிடைக்க வேண்டிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காமல் போயுள்ளன.

அவை ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

எனவே இன்று இலங்கைக்கு அரசியல் ஸ்திரத்தன்மையும் சமாதானமுமே தேவைஎன்று அவர் குறிப்பிட்டார்.

கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்கள் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற முனைந்தால், அவர்கள் நிராயுதபடுத்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

## பொருளாதார...

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை தேசிய சீர்திருத்த செயல்கமாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அரசியல் பங்காளிகள் மத்தியில் நேற்று உரையாற்றிய சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் இந்த நிலைமையைக் கவனத்திற்கொண்டு பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

உலகின் முக்கிய நகரங்களில் இலங்கை மீது தூதரகத் தடைகளை விதிக்கவும் வேறு வகையான பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்தவும் விவாதங்கள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

பொருளாதாரத் தடைகள் ஏற்பட்டால் பாதிக்கப்படப் போவது இந்தத் தேசத்தின் சாதாரண குடிமக்களாகவே இருப்பர்.

எனவே இதுபோன்ற நிலை ஏற்படாமல் இருக்க உயர்மட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் குழுக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உயர்மட்ட அதிகாரிகள் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றும் பிரேமதாஸ குறிப்பிட்டார். (ம-7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சபையை நிறுவ எதிர்க்கட்சி நடவடிக்கை

(கொழும்பு)

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தேசிய சபையொன்றை நிறுவ எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.



கொழும்பு மார்க்ஸ் பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று முதல் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் போன்றவற்றை ஒன்றிணைத்து இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

தேசியசபைக்கு வரும் சிறந்த முன்மொழிவுகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


## பணியாளர் தேவை

வீட்டில் தங்கி குழந்தைகளை பராமரிக்க பெண் பணியாளர் தேவை.

தொடர்புகளுக்கு (12256)

077 030 6881



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12257)

076 825 7716 (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- யாழ். நகரத்தில் இருந்து 4 Km தூரத்தில் அமைந்துள்ளது
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணிமுதல் மலை 6.00 மணிரை

ஜெயம்: தரகர் தேவையில்லை (12248)

077 814 7389, 077 241 7589



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4659)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உடையது இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4659) V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 78 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

(12251)

பார்வையிடும் நேரம்

காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029


சர்வகட்சி அரசாங்கத்தில்

# ஐக்கிய மக்கள் சக்திக்கும் 8 அமைச்சுப் பதவிகள்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கு எட்டு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்க அரசாங்கத்தின் தரப்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வகட்சி அர சாங்கத்தில் பொது ஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் விமல் வீரவன்ஸ தரப்பினருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளப் போகின்றனர் என்ற தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (ம-7)

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் சர்வகட்சி அர சாங்கம் அமைக்கப்பட்டு புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் எனவும் தற்போதைய அமைச்சரவை தற்காலிகமானது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.


## வீசா சேவைகள்

நேர் வழியில் குறுகிய காலத்தில் ஐரோப்பியா செல்ல அரிய வாய்ப்பு!

ஐரோப்பிய நாடான Azerbaijan இல் 6 மாத கல்வியின் பின்னர் நீங்கள் விரும்பிய நாடொன்றில் குடியேறலாம்.

**( Hungary, Poland, France, Swiss, Germany )**

- ஆகக் குறைந்த தகைமை O/L
- 7 நாட்களில் இலங்கையிலிருந்து பயணமாகலாம்
- 30 வயதிற்குட்பட்டவர்கள்

(12259)

விண்ணப்ப முடிவுத் திகதி - 31.07.2022

070 461 4192


# மரண அறிவித்தல்

திருமதி **மனோகரன் புஸ்பம்** (தங்கமணி)

(முன்னைநாள் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்)



8ஆம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட முன்னைநாள் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளருமாகிய மனோகரன் புஸ்பம் (தங்கமணி) அவர்கள் கடந்த 23.07.2022 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோகரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அடைக்கலம் - மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அற்புதம் - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும் சுதாகரன் (சுதா - லண்டன்), சுதர்சன் (சுதன் - லண்டன்), சுபாசினி (சுசி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று உடலம் இன்று (26.07.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மந்துவில் திருமுக ஆண்டவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியோடு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஆம் வட்டாரம்,
மந்துவில், புதுக்குடியிருப்பு. (12261)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.